[2018 ஜூன் 7

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அந்தக் கிராமப் பகுதிகளில், 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு, சரித்திரத்தில் இல்லாத வகையில், 125 கால்நடைக் கிளை நிலையங்களைக் கொடுத்து, அற்புதமான ஒரு சாதனையைப் படைத்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கெல்லாம் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று கருத்துரு வரப்பெற்று, தேவைப்படுமாயின், அங்கெல்லாம் அமைக்கலாம் என்று ஏற்கெனவே, துறை ரீதியாக நடைபெற்ற கூட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லி, கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

துணை சுகாதார நிலையம்

***16197—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், தெக்களூர் கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூன் 7]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த முடியுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்.—ஏற்கெனவே தமிழகத்திலே 1,806 ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Primary Health Centres) *செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. 8,706* (Sub centres) *துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தியாவிலே முதன்முதலாக இந்த ஆண்டு, ஒரு முன்னோடித் திட்டமாக double VHN *என்று சொல்லக்கூடிய* Health and Wellness Centre *என்ற அடிப்படையில், அனைவருக்கும் நலவாழ்வு என்ற அடிப்படையில், முதன்முதலாக ஒவ்வொரு சுகாதார மாவட்டத்திலும் ஒரு ஒன்றியத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த ஓர் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய துணை ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 சுகாதார செவிலியர்களை நியமிக்க இருக்கின்றோம். முதன்முறையாக, இந்த ஆண்டு 895 சுகாதார செவிலியர்களை நியமிக்க இருக்கின்றோம்.*

முற்பகல் 10-55

இதன்மூலம் ஏற்கெனவே மருத்துவமனைகள்-ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவர்கள் மருத்துவருடைய அறிவுரைப்படி, மருந்துகளை எல்லாம் பெற்றிருப்பார்கள். அதிலும் குறிப்பாக, தொற்றா நோய் என்று சொல்லக்கூடிய diabetes, hypertension *போன்ற நோய்களுக்குத் தொடர்ந்து மருந்து பெறுதல்; முதல் உதவி சிகிச்சை-*First Aid *பெறுதல்; அதுமட்டுமல்லாமல்,* basic diagnosis *என்று சொல்லக்கூடிய அடிப்படை மருத்துவப் பரிசோதனை என்ற புதிய முனைப்பான திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டு செயல்படுத்தியிருக்கிறது. அதனடிப்படையிலே, தங்களுடைய மாவட்டத்திலே, பெரியபாளையம்* Additional P.H.C.*-யும், எல்லாபுரம் ஒன்றியமும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. வருங்காலத்திலே அதே திட்டத்தின்கீழ், தாங்கள் சொல்லியிருக்கக்கூடிய இந்தத்*

[2018 ஜூன் 7

துணை ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகிற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேசிய ஊரக சுகாதார நலத் திட்டம் மற்றும் தமிழ்நாடு சுகாதார நலத் திட்டம் ஆகிய இரண்டு மாபெரும் திட்டங்களை சிறப்பான முறையிலே செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையிலே, நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதி, தெக்கலூர் கிராமத்திலே இருக்கிற துணை சுகாதார நிலையத்தை, ஆரம்ப சுகாதார நிலையமாக மறுபதிவு செய்து, அதனை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நீண்ட நெடு நாட்களாக அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது.*

மேலும், தெக்கலூர் கிராமம் 15 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். கிட்டத்தட்ட 50,000 மக்கள்தொகை கொண்ட பகுதியாக தெக்கலூர் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு, தெக்கலூர் துணை சுகாதார நிலையத்தை, ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித் தருவதற்கு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய நீண்டகால கோரிக்கையான பாலாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்—தற்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை பிறப்பித்து, அது எந்த நேரத்திலும் திறக்கப்படலாம் என்ற நிலையில் இருக்கிறது. அந்தச் சுகாதார நிலையத்தை திறந்ததற்குப் பின்,

2018 ஜூன் 7]

வருங்காலத்திலே இந்தக் கோரிக்கையையும் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, தங்களுடைய மாவட்டத்தில் உள்ள மோரை, குருவிவயல் போன்ற இடங்களில் மருத்துவ வசதி தொடர்பான நீண்ட நெடியகால கோரிக்கைகள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் தற்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேட்காமலேயே கொடுக்கிற அரசுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்த பாலாபுரம் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தை இந்த ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய தொகுதியின் சார்பிலே மீண்டும், மீண்டும் நன்றிகலந்த வணக்கத்தை, நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், திருத்தணி தொகுதி, பொதட்டூர்பேட்டையிலே வட்டம் சாரா மருத்துவமனை ஒன்று உள்ளது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த மருத்துவமனை 36 படுக்கை வசதிகள் கொண்டதாகும். பொதட்டூர்பேட்டை பேரூராட்சியாகும். தினந்தோறும் சுமார் ஆயிரம் நோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். அங்கே 2 மருத்துவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், 5 மருத்துவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். இம்மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சை அரங்கம் வேண்டுமென்றும்; ஆண்கள் மற்றும் பெண்கள் வார்டுகள் தனித் தனியாக வேண்டுமென்றும்; 8 செவிலியர்கள் வேண்டுமென்றும்; மகப்பேறு மருத்துவர், பல் மருத்துவர், x-ray technician வேண்டுமென்றும் கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு, பொதட்டூர்பேட்டையில் உள்ள

வட்டம் சாரா மருத்துவமனைக்கு பொது மக்கள் நலன் கருதி, இத்தகைய வசதிகளை உடனடியாக உருவாக்கித் தருமா என கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை, இந்தியாவினுடைய மருத்துவத் தலைநகரமாக விளங்கி வருகிறது. சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. தாங்கள் குறிப்பிட்டிருக்கின்ற பொதட்டூர்பேட்டைக்கு நானே நேரடியாக வந்து அந்த மருத்துவமனையை ஆய்வு செய்திருக்கின்றேன். தாங்களும் உடன் வந்தீர்கள். பொதுவாக, பொதட்டூர்பேட்டை மட்டுமல்ல; Secondary Care Unit என்று சொல்லக்கூடிய இரண்டாம் நிலையில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலுமே பெருகி வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப, செவிலியர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். 4,000 புதிய செவிலியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஓரிரு மாதங்களுக்குள்ளாக, செவிலியர்கள் விரைவிலே நியமிக்கப்படுவார்கள். அப்படி நியமிக்கப்படுகின்றபொழுது, தாங்கள் குறிப்பிடுகின்ற பொதட்டூர்பேட்டை மருத்துவமனையில், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதியில் போளூர் ஒன்றியம், முருகாப்பாடி ஊராட்சியில் இயங்கி வந்த துணை சுகாதார நிலையம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பழுதடைந்த நிலையில் இருந்ததால் இடித்து அப்புறப்படுத்தப்பட்டது. அந்தச்

2018 ஜூன் 7]

சுகாதார நிலையத்தைப் புதுப்பித்து, அங்கே மீண்டும் ஒரு புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதனை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

149—

புதிய வட்டம்

***2482—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தை இரண்டாகப் பிரித்து துடியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூரை தலைமையிடமாகக்கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல் தொடர்பாக, உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார். அரசாணை